தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 18உ செவ்வாய் (31—1—56) ★ ★ வெளியூர்: தை 19உ புதன் (1—2—56) [இதழ் 196

ஒலியைவிட நான்கு மடங்கு வேகத்தில் பறக்கும் விமானம்

நியூயார்க், ஜன. 31—

மணிக்கு 17,500 மைல் வேகத்தில் பறக்கக்கூடிய ஒரு விமானத்தைக் கட்டுவதற்கு முயற்சிக்கப்பட்டு வருகிறதாம்.

இந்த வேகம், ஒலியின் வேகத்தைப்போல் 18 மடங்கு அதிகமாகுமென்றும், இந்த விமானம் ராக்கெட் சக்தியின் மூலம் இயங்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விமானத்தை இன்னும் 10 அல்லது 15 வருடத்தில் வர்த்தக ரீதியில் உபயோகிக்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்குக்குத் தெற்கு தாக்கீது!

ஆங்கிலமே பொது மொழி

பத்து கோடி தென்னக மக்கள் இந்தித் தொடர்பற்றவர்

அவர்கள் மீது இந்தி திணிப்பது அநீதி

ஆச்சாரியார் — பெரியார் கூட்டணி அமைகிறது

கூட்டணியில் தி. மு. கழகம்

வடக்கு இனி என்ன பதில் அளிக்கும்?

கக்கன்ஜீயும் காமராஜ் ஜீயும் போதுமா !!

தமிழ்க்கலைக் கழக முயற்சியால் எழும்பிய பிரச்சினை!

டில்லியின் நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது

(நமது அரசியல் நிருபர்) சென்னை, ஜன 31—

'கட்டாய இந்தி'யைப் புகுத்திய ஆச்சாரியாரும், அதனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்ட பெரியாரும், அன்று அவருடன் இருந்து தொண்டாற்றி—இன்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளராக விற்றிருக்கும் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் ஒன்றுக ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபடுவதும், அதுவும், தென்னகத்து மக்களின் மொழி, கலை, வாழ்வு ஆகியவற்றினை ஒழித்திடும் வகையில் வடக்கே இருந்து இந்தி ஆதிக்க வெறியினர் எடுத்துக்கொள்ளும் சதித் திட்டத்தை முறியடிக்கவும் ஒன்றுபட்டுச் செயலாற்றக்கூடியதும், தென்னக வரலாற்றிலேயே ஓர் திருப்புமுனை என்று கூறத்தக்கதாக அமைந்திருக்கிறது.

அரசியல் கட்சிகளில் ஈடுபாடு கொள்ளாமல் தமிழ்ப் பணியாற்றிவரும் திரு. சுப்பையாபிள்ளை அவர்கள் இதற்கான முயற்சியை மிக்க ஆர்வத்துடன் நீண்ட நாட்களாகச் செய்து வெற்றி கண்டார்.

அவருடைய இல்லமான **'தமிழகம்'**, *இந்தக் கூட்டணி அமையும் கோட்டமாயிற்று.*

தமிழ்ப் பெரும்புலவர்களாம் பேராசிரியர்கள் சேதுப் பிள்ளையும், டாக்டர் மு. வரதராசனும் அன்று அவையில் அமர்ந்திருந்து தமிழகத்தின் எதிர்காலம் இனி இந்தி ஆதிக்கத்தால் கெடாமல் பாதுகாக்கப்படுவதற்கான பெருமுயற்சி மேற்கொள்ளப்படுவது கண்டு உளம் களித்தனர்—ஒப்பம் அளித்தனர்.

'ஆங்கிலமே பொது மொழியாக இருத்தல் வேண்டும்' என்று தீர்மானிப்பது, ஆங்கில மோகம் காரணமாக அல்ல—தமிழ் அன்பு இல்லாததால் அல்ல என்ற பேருண்மைக்கு உத்தரவாதமளிப்பது போல, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அந்த அவையில் அமர்ந்து, சீரிய யோசனைகள் அளித்தார்; இறுதியில் ஆங்கிலமே பொது மொழி என்ற முடிவுக்கு ஒப்பமளித்தார்.

அன்றைய அவையில் வந்திருந்தவர்களின் பெயர்ப்பட்டியலைக் காணும்போது, உள்ளபடி, வடக்குக்கு தெற்கு, மொழி சம்பந்தமாகத் தாக்கீது பிறப்பித்திருக்கிறது என்பதும், இதனை அலட்சியப்படுத்திவிடுவதென்பது எளிதான காரியமல்லவென்பதும், அதனையும் செய்[illegible] அளவுக்கு வடக்கு துணிந்தால், விளைவு விபரீதமாகத்தான் இருக்குமென்பதையும் அறிந்துகொள்ளலாம்.

வேறு எந்தப் பிரச்சினை குறித்தும் அங்கு கவனிக்கப்படவில்லை. ஆட்சி மொழி, பாடத் திட்டம், கல்வி முறை போன்ற பிரச்சினைகள்கூடக் கவனிக்கப்படவில்லை; ஏனெனில், இவற்றிலே எல்லாம்கூடப் பலமான கருத்து வேறுபாடுகள் உள்ளன; அவைகளைக் கிளறிக்கொண்டு, ஒத்த கருத்தினை எடுத்துக்காட்டும் முயற்சி குலையவிடக் கூடாது என்று கருதப்பட்டது.

உடனடியாகத் தலைமீது விழ இருக்கும் பேரிடியினின்றும் தமிழ்நாடு காப்பாற்றப்பட வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் அவசர அவசியமுமே அன்று அத்தனை கோணங்களில் உள்ளவர்களையும் ஒன்றுகூட்டி வைத்தது.

"இந்தப் பிரச்சினையிலே எனக்கும், நான் பணியாற்றிவரும் கழகத்துக்கும் மிகுந்த அக்கரை உண்டு; நான் இதற்கான முயற்சி வெற்றி பெற வேண்டுமென்று பெரிதும் விழைகிறேன்; ஆனல் தி. மு. க. கலந்துகொள்ளும் முயற்சிகளில் பெரியார் கலந்துகொள்வது கிடையாது; நாங்கள் வருகிறோம் என்பதையே காரணம் காட்டி, பெரியார், இந்தப் பெருமுயற்சிக்கு ஆக்கமளிக்க முன்வராமல் போய் விடக்கூடாதே—அது ஒன்றுதான் எனக்குள்ள அச்சம்," —என்று, அண்ணுதுரை, தமிழ்க் கலைக் கழகத் தலைவரின் அழைப்பு கிடைக்கப்பெற்றபோது கூறினர்.

தமிழ்க்கலைக் கழகத் தலைவர்—"பெரியார், அத்தகைய போக்கினராக இல்லை; நீங்கள் வருவது குறித்து அவருக்கு எதும் கசப்பு இல்லை; மாருக, அவரிடமே நான் கூறினேன் — அண்ணுதுரையைப் பார்த்துப் பேசப் போகிறேன்—என்று; அவரும் சரி என்ருர்"—என்று தெரிவித்தார்.

தென்னகத்தின் அரசியல் வாழ்வில் இது ஓர் திருப்பு முனைக்கு அழைத்துச் செல்லும் சம்பவமாகிறது என்று கருதக்கூடிய வகையில்—என்றுமில்லாத் திருநாள் இன்று, என்று கூறத்தக்கவகையில், இந்த மொழி மாநாடு பற்றிய செய்தியை 'விடுதலை' வெளியிட்டிருப்பதில், அண்ணுதுரை (தி. மு. க.) என்றும், நெடுஞ்செழியன் (பொதுச் செயலாளர்—தி. மு. க.) என்றும் ஒப்பமளிப்பது போலத் தீட்டியிருக்கக் கண்டு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் மகிழ்வெய்தினர்; பொதுச் செயலாளர் தமது கடற்கரைப் பேச்சிலே பெரியாருக்கு நன்றி கூறிக்கொண்டார்.

இத்தகைய மனமாற்றமும், ஒற்றுமை ஆகாவும் ஏற்பட்டதற்குக் காரணம், இவ்விதமானதோர் சீரிய முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால் 196 *பிறந்ததும் ஆங்கிலம் அறவே அகற்றப்பட்டு, இந்தி, யூனியன் அதிகார மொழியாகிவிடும்; அதன் விளைவு தென்னகத்தே இந்தியுடன் தொடர்பற்றுள்ள 10 கோடி மக்களும்—குருடர்கள், செவிடர்கள் - அரசியல் அடிமைகள் ஆக்கப்பட்டுவிடுவர் என்பதாகும்; இந்தியைத் தமது தாய் மொழியாகக் கொண்டவர்கள் 'தர்பார்' நடத்துவர் என்பதாகும்.*

இந்தப் பேராபத்தை நீக்கவே இப்பெருமுயற்சி.

"30 ஆண்டுகள், 50 ஆண்டுகள் ஆங்கிலம் இருக்கட்டும்—பிறகு வேண்டுமானல் இந்தி வரட்டும்"

என்று, முறையே இராமசாமி சாஸ்திரியாரும், வெங்கடராம ஐயரும் கூறிய அபிப்பிராயம் கூட சரியல்ல என்று விடப்பட்டு, ஆச்சாரியாருடைய சீரிய யோசனையும் பெரியாருடைய அறிவுரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு,

"இந்திய யூனியனில் எல்லா மாநிலங்களிலும் பிரதேசங்களிலும் இன்று பொதுப் பணியில் ஈடுபடத் தகுதி பெற்றுள்ள அத்தனை கல்வி அறிவு பெற்ற குடிமக்களும் போதுமான ஆங்கில மொழி அறிவு பெற்றிருக்கிருர்கள் என்பது கேள்விக்கு இடமில்லாத உண்மை என்பதினுலும், இந்தியாவில் உள்ள எந்த ஒரு தனி மொழியும் இந்த நிலையைப் பெற்றிருக்கவில்லை என்பதினுலும் இந்திய யூனியன் சர்க்காரின் அரசாங்க மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டும்; மாநிலங்கள்—மத்திய சர்க்காருக்கும், ஒரு மாநிலம் மற்ற மாநிலத்திற்கும் இடையில் நடத்தும் கடிதப் போக்கு-வரத்தும் தொடர்ந்து ஆங்கில மொழியிலேயே நடைபெற வேண்டும் என்பதும்தான் பிரச்சினைக்குரிய நியாயமான—தேவையான பரிகாரமாகும்; இதில் ஒருதலைப்பட்சக் கருத்திற்கே இடமில்லை.

"சர்வ தேசத் தொடர்புகளுக்குப் பயன்படுவதற்காகவும், உலகத்தில் வளர்ந்து வரும் நவீன கால அறிவைப் பெறுவதற்கும், ஆங்கிலம் தொடர்ந்து இந்தியக் கல்வித் திட்டத்தில் நிச்சயம் இடம் பெறப் போகிறது—இடம் பெறவேண்டும் என்பதும், எங்களது கருத்தை உறுதி செய்கிறது.

"எனவே, ஆங்கிலம் இன்று பெற்றுள்ள அரசாங்க மொழி என்ற இடத்தை வேறு எந்த ஒரு மொழியையும் பெறச் செய்வது வடிகட்டிய அநீதியாகும்; ஏனெனில், அப்படிக்கொண்டு வரப்படுகிற மொழி, தென்னுட்டில் வாழும் 10 கோடி மக்களுக்கு, அந்த மொழி அவர்களது நடைமுறைக் காரியங்களில் எவ்விதத் தொடர்பும் பரிச்சயமும் இல்லாத ஒரு அன்னிய மொழியாகும்.

"இப்படிக் கூறுவதினுல் இந்தியாவில் சமூக, வர்த்தகத் தொடர்புகளுக்காக, எந்த ஒரு மொழியும் இயற்கையாகவே வளர்ச்சி பெறுவதற்கு நாங்கள் குறுக்கே நிற்பதாக எவரும் தவருகப் புரிந்துகொள்ளக் கூடாது."

என்ற முறையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'ஆங்கிலமே பொது மொழி' என்ற இக்கருத்தினை, அதிகாரத்திலுள்ளோருக்கு அறிவித்துவிட்டு, 'பயன் என்ன கிடைக்கிறது' என்பதைப் பார்த்துவிட்டுப் பிறகு, மேற்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சி பற்றிக் குழு யோசிக்கும்.

மொத்தத்தில், எந்த ஒரு பிரச்சினையிலும், இதிலே கிடைத்ததுபோன்றதோர் நல்லார்வ ஒற்றுமை கிடைத்ததில்லை; இந்தக் கூட்டணியின் கருத்தினை—வகுப்பு வாதம், துவேஷம், குறுகிய மனப்பான்மை, மொழிவெறி, தேசாபிமானமற்றப் போக்கு—என்று எந்தப் பழியும் கூறி மாசுபடுத்த முடியாது; ஏனெனில், இதில் கலந்துகொண்டு ஒப்பமளித்துள்ளவர்கள் :—

திரு. சி இராசகோபாலாச்சாரியார், திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. இராமசாமி, நீதிக் கட்சித் தலைவர் பி. டி. இராசன், அண்ணுமலைப் பல்கலைக் கழக வேந்தர் ராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார், சி. என். அண்ணுதுரை, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், திராவிட பார்லிமெண்ட்ரி கட்சித் தலைவர் எஸ். சுயம்பிரகாசம், அண்ணுமலைப் பல்கலைக் கழக முன்னுள் துணைவேந்தர் எஸ். ஜி மணவாள இராமானுசம், தி. சொ. மாநில முன்னுள் தலைமை நீதிபதி டி எம். கிருஷ்ணசாமி அய்யர், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் ஏ. இரத்தினம் எம். எல். ஏ, இந்திய ஊழியர் சங்கச் செயலாளர் எஸ் ஆர் வெங்கட்ராமன், சென்னை தமிழ்ப் பேரவைச் செயலாளர் கி. ஆ. பெ விசுவநாதம், சென்னை பல்கலைக் கழகப் பேராசிரியர் ஆர். பி. சேது பிள்ளை, பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர், 'கல்கி' ஆசிரியர் எம். பி. சோம

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

இன்று (31-1-56) சென்னை வண்ணையம்பதியில் அண்ணு அவர்கள் ஆற்றும் கருத்துரையும், சென்னை கடற்கரையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய விளக்கவுரையும் நாளை இதழில் வெளிவரும்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 31—1—'56 செவ்வாய்

பொதுக் குழு முடிவு

நில நூல் அமைப்பிலும், வரலாற்றுப் பின்னணியிலும், பொருளாதார அடிப்படையிலும், மொழிவழியிலும், தேவிகுளம்-பீர்மேடு ஆகிய இரு நிலப்பரப்பும் சென்னைத் தமிழ் நிலத்துடன் இணைக்கப்பட வேண்டியதாகும். கண்டிப்பாக ஒப்புக்கொண்டு அறவழி நிற்க வேண்டிய மாகாணப் புனரமைப்புக் குழு, நீதி வழி நிற்கத் தவறிவிட்டது.

தமிழர்கள் சீறியா பாய்வர்--உரிமையைப் பெற உணர்ச்சி கொள்ளவா போகின்றனர்—இடி, அடி, உதை எதுவானலும் தமிழர்கள் மனங்கோணுது தாங்கிக்கொள்வர்—அவர்கள் அதற்கே பிறந்தவர்கள் என்று பெருந் தவருன கருத்தைக் கொண்டுவிட்டது, மாகாணப் புனரமைப்புக் குழு என்பதை அதன் அநீதியான முடிவு எடுத்துக்காட்டியது.

ஏனென்று கேட்கத் தமிழர்களுக்கு நாதி ஏது—எற்குமா இந்த அநீதி எனக் கேட்கத் தமிழர்களுக்குத் தலைவர்கள் ஏது—எக்கொடுமைகளை இழைத்தாலும், எத்தகு இன்னல்களுக்கு உள்ளாக்கினலும், டெல்லி ஆதிபத்தியத்தை எதிர்த்துக் கேட்கத் தமிழர்களுக்குத் தளபதிகள் ஏது—இப்படித் தமிழர்கள் நிலை குறித்துக் கொண்டிருந்த நினைப்பின் காரணமாகத்தான் புனரமைப்புக் குழு, தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் அழிவை உண்டாக்க முனைந்தது என்று எவரும் கருதும் படியாக அக்குழுவின் முடிவு இருந்திருக்கிறது.

மாகாணப் புனரமைப்புக் குழு கருதியதுபோலவே, அதன் அநீதியான தீர்ப்புக் கிடைத்ததும், தமிழர்கள் வெளிப்படையாகப் புலி எனச் சீறிப் பாயவில்லை; புயலென வீசவில்லை; வெள்ளப் புனலெனப் பொங்கிடவில்லை. ஆனல் வெளிப் பார்வைக்குத் தெரிந்த தமிழர்களின் அமைதி, உரிமைகளை இழக்கத் தாங்கள் துணிந்து விட்டார்கள் என்பதைக் காட்டும் அறிகுறியாகக் கொள்வதற்கும் தக்க ஆதாரமாகி விடாது.

தீர்ப்புக் கேட்ட தமிழர்கள், வெளிப் பார்வைக்குத்தான் சாந்தசொரூபிகளாக இருந்தார்களே அல்லாது, அவர்கள் உள்ளம் எப்பொழுதும்போல் எரிமலையாகத்தான் இருந்திருக்கிறது. அந்த எரிமலை பயங்கரமாக வெடித்துக் கொள்ளிவாய் நெருப்பிழம்புகளைக் கக்காமல் இருந்ததற்குக் காரணமே, மாகாணப் புனரமைப்புக் குழுவின் முடிவு இறுதியானது அல்ல—இறுதியானத் தீர்ப்பு தங்களுக்குச் சாதகமாகக் கிடைக்கும் எனத் திடமாக நம்பிக்கொண்டிருந்ததேயாகும்.

இத்தகு நம்பிக்கையைத் தமிழர்கள் கொள்ளும்படி, சென்னை ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்துள்ள கட்டியக்காரர்கள், டெல்லி ஆதிபத்தியத்தினரின் நேர்மைக் குணம் பற்றி தமிழர்களிடைக் கட்டியங் கூறிவந்தனர். ஆட்சிபீடத்தமர்ந்துள்ள அலங்காரப் பதுமைகளின் அர்த்தமற்றப் பேச்சை நம்பினதால் தமிழர்கள் பெற்றது ஏமாற்றம்—பெரும் ஏமாற்றம்.

ஆட்சியாளர் சூதறிந்தத் தமிழரசுக் கழகத் தலைவர், தனது கூட்டுத் தோழர்களுடன் கலந்துகொண்டு, தன் ஆற்றலுக்கேற்ப, தமிழர்களின் உரிமையைக் கோரி அமைதியான நேரடி நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபட்டார். தமிழரசுக் கழகத் தொண்டர்கள், அஞ்சல் நிலையங்களை அமைதியான முறையில் மறியல் செய்தனர்; சிற்சில புகை வண்டிகளை நிறுத்தினர்; சட்டசபை முன் முறைதவறுது ஆர்ப்பாட்டமும் செய்தனர்.

அக்கழகத்தின் அமைதியான நேரடி நடவடிக்கையால், தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினை குறித்துக் குறைந்த அளவில் தமிழர்கள் உணர்ந்து கொள்ள முடிந்தது. காங்கிரஸ் ஆட்சியாளர்கள், தமிழர்களுக்குச் செய்துள்ள மகத்தான துரோகத்தின் தன்மையையும் சிலபல தமிழர்களாவது புரிந்து கொள்ள முடிந்தது. தான் தந்தத் தீர்ப்பை இரு கையேந்தி வரவேற்பவர்களாகத் தமிழர்கள் இருக்கவில்லை என்ற பேருண்மையை, இந்தியப் பிரதமர் ஒரு சிறிய அளவிற்காவது உணர்ந்துகொள்வது சாத்தியமாயிற்று.

இந்தியப் பேரரசின் அநீதியான முடிவை எதிர்த்துத் தமிழரசுக் கழகத் தோழர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி சிறிதாயினும், பெரிதாயினும் அல்லது எதுவாயினும், அதன் விளைவு, தமிழர்களுக்குச் சாதகமானதே அல்லாது பாதகமானதாகாது. சர்வகட்சியினரும் சேர்ந்து துவக்க இருக்கும் மகத்தான அறப்போருக்கு, அக்கழகத்தின் அறப்போர் ஒரு ன்மாதிரியேயாகும். அதை ஒரு பரீட்சார்த்தத் திட்டமெனக் குறிப்பிட்டாலும், அதை மிகைப்படக் கூறியதாகாது.

அக்கழகத் தலைவரை அறப்போராட்டத்தில் கலந்து கொண்டு இன்முகத்துடன் இன்னல்களை ஏற்றுக்கொண்ட கழக இளைஞர்களை, நாம் பாராட்டுகிரோம். தமிழர்களின் பாராட்டுக்கு, அவர்கள் செயல் உரியதேயாகும்.

இந்தியப் பேரரசின் ஆணவத் தீர்ப்பை எதிர்த்து முறியடிக்க, மகத்தானதோர் வெற்றி காண, சர்வ கட்சியினரும் ஒன்றுகூடி, ஒரு அறப்போர் முன்னணி அமைத்துள்ளனர்.

மதிப்புக்குரிய தலைவர் பொன்னம்பல தியாகராசன் அம்முன்னணிக்குத் தலைமை பூண்டுள்ளார்.

சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் கூறியதற்கிணங்க, தமிழரசுக் கழகத் தலைவர், தம் கழகம் மட்டுமே தனித்து நின்று நடத்தி வந்தத் தமிழர் உரிமைக் கிளர்ச்சியை நிறுத்திக்கொண்டார். இனி சர்வகட்சியினரும் கூடி உருவாக்கியுள்ள தமிழர் அறப்போர் முன்னணி, தமிழர் உரிமையைக் காக்கும் பெரும் பொறுப்பினை மேற்கொண்டு இருக்கிறது. அம்முன்னணியில் தமிழரசுக் கழகமும் இனி ஒரு உறுப்பாய் செயல்படப் போகிறது.

சர்வ கட்சிக் கூட்டமைப்பு முடிவை, நமது திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழு முழுமனதுடன் ஒப்புக்கொண்டுள்ளது.

சர்வ கட்சியினர் கேட்டுக் கொண்டுள்ளபடி வரும் பிப்ரவரி 20-ந் தேதியன்று தமிழகமெங்கணும் பொது வேலை நிறுத்தம் நடைபெறுவதற்கு, தி. மு. கழகத் தோழர்கள் தங்களது முழு ஒத்துழைப்பையும் தருவார்கள் என்பதைத்தான், கழகப் பொதுக்குழுவின் முடிவு உறுதி கூறுகிறது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு. கழகக் கிளைகள் பொதுக் குழுவின் இந்த முடிவை மட்டுமின்றி, அடுத்து விளக்கப்படவிருக்கும் இதர முடிவுகளையும் ஊன்றிக் கவனித்துத் தங்களது செயல்முறைகளை வகுத்துக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

தீண்டாமை ஒழிப்புக்கு சுமார் ரூ. 2 கோடி

சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, ஜன. 27—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட நகல் மசோதாவில், தீண்டாமை ஒழிப்பு வேலைகளுக்காக மாநில சர்க்கார் ரூ. 1,88,90,000 ஒதுக்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இத்திட்டப்படி, அரிசனங்கள் அல்லாதோர் வாழும் பகுதிகளிலோ அல்லது காலனிகளிலோ ஆண்டுதோறும் 5,000 வீடுகள் அரிசனங்களுக்குக் கட்டித் தரப்படுமாம். இது தவிர, பள்ளிக் குழந்தைகளுக்கென புதிதாக 13 - மாணவர் விடுதிகளும் கட்டித் தரப்படுமாம்.

மேலும், அரிசனங்கள் வசிக்கும் பகுதிகளில் 244 பள்ளிகள் மேற்கொண்டும் திறக்கப்படுவதும், வேலை தேடித் தரும் நிறுவன அதிகாரிகளாக 7 அரிசனர்களை நியமிப்பதும் இத்திட்டத்தின் மற்றும் சில அம்சங்களாகும் என்றும் தெரிகிறது.

பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள்

29—1—56-ல், சிதம்பரத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் விபரம் மாவட்டவாரியாக இங்கு தரப்படுகிறது :—

சென்னை :

இரா. நெடுஞ்செழியன்
என். வி. நடராசன்
அலமேலு அப்பாதுரை
இளம்பரிதி
சத்தியவாணிமுத்து
கே. எம். கண்ணபிரான்
ஆர். டி. அரசு
கே. கோவிந்தசாமி
டி. வி. நாராயணசாமி
மு. புரட்சிமணி
காஞ்சி - மணிமொழியார்
கோ. இளவரசு

செங்கற்பட்டு :

சி. என். அண்ணுதுரை
டி. கே. போரூரான்
கே. டி. எஸ் மணி
பா. சு. மணி
என். ஜி. கண்ணப்பன்
இராம. அரங்கண்ணல்
டி. இரத்தினம்

வட ஆற்காடு :

சி. பி. சிற்றரசு
முல்லை சத்தி
போளூர் கே சுப்பிரமணியம்
க. நெடுஞ்சோழன்
அ. கருத்தோவியன்
எஸ். ஏ. கன்னையன்

தென் ஆற்காடு :

தில்லை - வில்லாளன்
இரா. சாம்பசிவம்
க. அறிவழகன்
பொன். சொக்கலிங்கம்
சி. முனுசாமி
ச. சிவப்பிரகாசம்
நா. நாச்சியப்பன்
ஆர். தேவநாதன்
வாணிதாசன்

சேலம் :

எம். பி. சுப்பிரமணியம்
ஜி. பி. சோமசுந்தரம்
ப. இராமலிங்கம்
ஈ. ஆர். கிருஷ்ணன்
ப. கண்ணன்
இரெ. தாண்டவன்
பி. எம். குப்புசாமி
சிற்றூளி - சுபபிரமணியம்
கே. பெருமான்
எச். எல். முருகேசன்
க. கு. சின்னச்சாமி

கோவை :

ஈ. வெ. கி. சம்பத்
கே. ஏ. மதியழகன்
எஸ் அப்பாவு
எஸ் ஏ இராசமாணிக்கம்
சி. முத்துசாமி

தஞ்சை :

என் எஸ் இளங்கோ
மு. கருணநிதி
கே. கே. நீலமேகம்
கு. அடைக்கலம்
என். கிட்டப்பா
எஸ். பெத்தண்ணன்
வி. சுப்பிரமணியம்
அ. சந்தானம்
ந. தர்மலிங்கம்

திருச்சி :

அன்பில் - தருமலிங்கம்
எம். எஸ் மணி
ஜி. பராங்குசம்
டி. பி. மூர்த்தி
எஸ். ஏ. ஜி. ராபி
எஸ் நெடுமாறன்
மு. பெ. முத்துக்கருப்பன்
டி. பி. அழகமுத்து
ஜம். எம். ஷெரிப்
தி. வீ. முத்துகிருஷ்ணன்

மதுரை :

தா. ஆவுடையப்பன்
எஸ். முத்து
கே விக்கிரமாதித்தராசன்
ஜி. கந்தசாமி
பி. சமதர்மம்

இராமநாதபுரம் :

எஸ். எஸ். தென்னரசு
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
முகவை ஆர். எஸ். பாண்டியன்
நவமார்க்கண்டேயன்
இல. ம. சௌந்திரபாண்டியன்
என். கே. குருசாமி
கண்ணதாசன்

நெல்லை :

பி. எஸ் கே ஜெயபால்
டபிள்யூ. டி துரைசாமி
எம். சபாபதி

நாஞ்சில் :

கி. மனோகரன்
பி. நடராசன்
வி. எம். ஜான்

பெங்களூர் :

ஏ. டி. பிரான்சிஸ்
எஸ். ஜே உசேன்

சித்தூர் :

கே. பார்த்தசாரதி
என். ஏ. ரஷீத்
வி. நாசிம்மன்

நியமன உறுப்பினர்கள் :

எம். ஜி. இராமச்சந்திரன்
அ. பொன்னம்பலனுர்
வி. கே. ஒளியழகன்
ஆர். பாலகுருசாமி

இவர்களைத் தவிர, தனி அழைப்பின்பேரில் தோழர்கள் க. அன்பழகன், எஸ். எஸ். பி. லிங்கம் (வேதாசலம்), கருணைச்சிகரம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஜி. எஸ் ஆர். மாணிக்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஊறல் பானையில் மா. சீ. கு. மசோதா

தட்சிணப் பிரதேசத் திணிப்புக்கு முயற்சி

சுப்பிரமணியம் நம்பிக்கை நாசமாகிறது

மாகாண சீர்திருத்தக் குழு மசோதா வரப்போகிறது. அதன் மீது சட்ட சபையில் விவாதம் நடைபெறப் போகிறது. அப்பொழுது நமது கருத்தை விளக்கமாகவும், விரிவாகவும் கூறலாம் என நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம், சென்னை சட்ட சபையில் உறுப்பினர்களுக்கு நம்பிக்கை அளிக்கிரூர். ஆனல், நிலைமையோ வேருக இருக்கிறது. அவர் எதிர்பார்ப்பதற்கு நேர்மாருக, அவர் சொல்லை அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளும் நிலையில் இந்தியப் பிரதமர் நேருவின் நடவடிக்கை இருக்கிறது.

மாகாண சீரமைப்புக் குழு மசோதாவிற்குச் சீட்டுக் கொடுத்துவிடுவது என இந்தியப் பேரரசு இறுதியாக முடிவு செய்துவிட்டதாக நம்பப்படுகிறது.

நாட்டில் நடைபெற்றக் குழப்பங்களும், தட்சிணப் பிரதேசம் என்ற பெயரில் மலையாளம், தமிழ், கன்னடம் ஆகிய மூன்று மொழிவழி மக்களைக் கொண்ட ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்ற முனைப்பும், பீகார்—வங்காள இருமொழி இணைப்பு அமைப்புப் பற்றிய முயற்சியும், மாகாண சீர்திருத்தக் குழு மசோதாவை அறவே கைவிட்டுவிட வேண்டுமென்ற நினைப்பை இந்தியப் பேரரசிற்குக் கொடுத்துள்ளன எனக் கருதப்படுகிறது.

மொழிவழி மாகாண அமைப்பு, இந்தியத் துணைக் கண்டத்தைச் சீரழியச் செய்துவிடும் என இந்தியப் பேரரசு எண்ணுகிறதாம்.

பிப்ரவரி முதல் தேதி பெங்களூர் வர இருக்கும் இந்தியப் பிரதமர் நேரு, திரு-கொச்சி, சென்னை, மைசூர் முதலமைச்சர்களை சந்தித்து, தாம் சிருஷ்டிக்க விழையும் தட்சிணப் பிரதேசம் குறித்துக்கலந்து பேசுவார் எனத் தெரியவருகிறது.

பம்பாயில் மீண்டும் ஆர்ப்பாட்டம்: போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

15 பேர் கைது; இருவர் படுகாயம்

ஊரடங்குச் சட்டம் நீடிக்கிறது

கடந்த ஒரு வார காலமாக அமைதி நிலவிய பம்பாய் நகரில் மீண்டும் போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகங்களும், ஆர்ப்பாட்டக்காரர்களின் கிளர்ச்சிகளும் தலை தூக்கியிருக்கின்றன.

மத்திய பம்பாயில், மக்கள் கூட்டம் அதிகம் கொண்ட தாக்குர்துவார் எனும் பகுதியில், மக்கள் திரள்முன் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். துப்பாக்கிப் பிரயோகத்தால் இரண்டு பேர் காயமுற்றனர் என்று பத்திரிகைகள் அறிவிக்கின்றன. போலீஸ் குழுமீது கற்களையும், கருங்கல்கட்டிகளையும் வீசி எறிந்ததினாலேதான் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது என்று கூறப்படுகிறது.

அந்த இடத்திலேயே போலீசார் 15 பேரைக் கைது செய்தனராம்.

அப்பகுதியிலுள்ள ஒரு கட்டிடத்தின் மொட்டை மாடியில் கூடி நின்ற ஒரு மக்கள் கூட்டம் கைகளில் கற்களையும், செங்கல்களையும் வைத்துக்கொண்டு பக்கத்திலிருந்த ஒரு கடையையும், மற்றும் சில கட்டிடங்களையும் தாக்குவதற்கெனக் குறி பார்த்துக்கொண்டிருந்ததாகவும், அந்நேரத்தில், அப்பகுதியில் ரோந்துவந்த போலீசார் இதனைக் கண்டதும் அக்கட்டிடத்திற்குள் நுழைய முற்பட்டனர் என்றும், ஆனால் அவர்கள் நின்றுகொண்டிருந்த கட்டிடத்தின் முன் கதவு பூட்டப்பட்டுக் கிடந்ததால், பூட்டையும் உடைத்து உள்ளே வர முயற்சித்தனர் என்றும், அப்படிப் பூட்டை உடைத்து மேலே வந்த போலீசார்மீது தயாராக வைத்திருந்த கற்களையும், செங்கற்களையும் அக்கூட்டத்தினர் வீசினர் என்றும், அதுபோததான் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் பத்திரிகைகள் செய்தி தருகின்றன.

கூடிநின்ற மக்களில் சிலர் மாடியிலிருந்து குதித்துத் தப்பி ஓடிவிட்டனர் என்றும்கூறப்படுகிறது.

பம்பாயில் இதுவரையிலும்நடைபெற்ற சம்பவங்களிலேயே இந்நிகழ்ச்சிதான் மிக மிகப் படுமோசமான நிகழ்ச்சி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சில வாரகாலமாகப் பம்பாய் நகரில் அமுலிலிருந்துவரும் ஊரடங்குச் சட்டம், முன்னெச்சரிக்கையின் காரணமாக மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

பாக். நகல் அரசியல் திட்டத்திற்கு எதிர்ப்பு

கிழக்கு வங்கம் முழுமையிலும் ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானின் நகல் அரசியல் திட்டத்தை எதிர்த்து கிழக்கு வங்கம் முழுமையிலும் (கிழக்கு பாகிஸ்தான்) ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் நடைபெற்றுள்ளன.

டாக்கா நகரில், கிழக்கு வங்க அவாமி லீக் தலைவர் மௌலானா பாஷானி தலைமையில் 2 மைல் நீளத்திற்குக் கண்டன ஊர்வலம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

கிழக்கு வங்கம் முழுமையிலும், இன்று, பஸ்கள் எதுவுமே ஓட முடியவில்லையாம். பல இடங்களில் ஆயுதந் தாங்கிய போலீசார் காவல் புரிந்திருக்கின்றனர். எனினும் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

இந்தியாவின் மொத்த வர்த்தகத்தில், நான்கில் ஒரு பகுதி, நாட்டின் விரிவான கரையோரம் நெடுகப் பரவியுள்ள சிறிய துறைமுகங்களின் வழியாக நடைபெற்று வருகிறது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர்

கராச்சி, ஜன. 29—

பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக முதன்முறையாக சர்தார் அப்துர் ரப் நிஷ்டார் என்பார் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சென்ற 1950-ம் ஆண்டுக்குப் பின்னர் இப்போதுதான் முதல் தடவையாகப் பாகிஸ்தான் பிரதம மந்திரி பதவியை ஒருவரும், முஸ்லீம் லீக் கட்சித் தலைமைப் பதவியை மற்றொருவருமாக வகித்து வருகின்றனர். இதுவரையிலும் பிரதமராக இருப்பவரே லீகின் தலைவராகவும் இருந்து வந்திருக்கிறார்.

ரூ. 30 - இலட்சம் மோசடி செய்ததாகக் கைது

பம்பாய், ஜன 28—

பம்பாயிலுள்ள 'பிரசிடென்சி ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்' என்ற நிறுவனத்தின் நிர்வாக டைரக்டரையும், நிர்வாக அக்கௌண்டெண்டையும் போலீசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

மேற்படி நிர்வாகத்திற்குச் சொந்தமான பணத்தில் சுமார் ரூ 30 இலட்சத்திற்கு மேல் நம்பிக்கை மோசம் செய்ததாக அவர்கள்மீது புகார் செய்யப்பட்டதாம். அதனையொட்டியே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புயல் நிவாரண நிதி

தமிழகப் புயல் நிவாரண நிதிக்கென, தென்னிந்தியக் கலைஞர் சங்கத்தவர், இரண்டாவது தடவையாக ரூ. 45,000-க்கான 'செக்' ஒன்றை சென்னைக் கவர்னர் பிரகாசாவிடம் அளித்திருக்கின்றனர்.

நிதித் தொகைக்கான 'செக்'கை நடிகர் தோழர் வி. நாகையா அவர்கள் கவர்னரிடம் அளித்தார்

இதுவரையிலும் தென்னிந்தியக் கலைஞர் சங்கத்தவர் புயல் நிவாரண நிதிக்கென ரூ. 86,000 வழங்கியிருக்கின்றனர்.

411 பெண்கள் உட்பட 2,000 தொழிலாளர் கைது

நாகபுரியில் ஊரடங்குச் சட்டத்தை மீறி தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

15 நாட்களுக்குத் தடையுத்தரவு

நாகபுரி, ஜன. 29—

நாகபுரி நகரின் சில பகுதிகளில் இன்று அதிகாலை, மாவட்ட மாஜிஸ்திரேட் 144 ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருந்தாராம். அந்த உத்தரவை எதிர்த்து ஊர்வலம், சத்தியாக்கிரகம் நடத்தினார்கள் என்பதற்காக சுமார் 2 000 பேருக்கு அதிகமான ஆலைத்தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர். இதனை ஒட்டி நகரிலுள்ள இரண்டு துணி ஆலைகளும் மூடப்பட்டுக் கிடக்கின்றனவாம்.

கைதான 2,000 பேரில் 411 பேர் பெண்கள் என்றும் கூறப்படுகிறது.

இங்குள்ள 'எம்பரஸ்' ஆலைகளிலுள்ள ஒரு 'யூனிட்டை' நிர்வாகிகள் மூடிவிட்டதை எதிர்த்து, நேற்று சுமார் 8,000 ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர்.

ஊர்வலத்தினர், இந்திய தேசிய தொழிற்சங்கத்தின் கிளை அலுவலகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் போலீசார் அவர்களை வழிமறித்து ஊர்வலத்தைக் கலைக்க முற்பட்டனராம். அவர்கள் மறுத்து, சாலை நெடுக உட்கார்ந்துகொண்டதால், போக்கு-வரத்துக்களுக்கு இடையூறு விளைவித்தனராம். பகலில் மட்டுமல்லாமல், நேற்றிரவு முழுமையிலும்கூட சுமார் 5,000 தொழிலாளர்கள் அப்படியே உட்கார்ந்து போக்கு - வரத்துக்குத் தடை உண்டுபண்ணினராம்.

இதற்கிடையில், 'எம்பரஸ்' ஆலையில் சீரமைப்புத் திட்டம் அமுல் செய்யப்படுவது பற்றி மத்தியப் பிரதேச சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில், அத்திட்டத்தால் தொழிலாளர்கள் நலன்கள் பாதிக்க சர்க்கார் அனுமதிக்காது என்று குறிப்பிட்டிருக்கின்றனராம்.

இரவு முழுமையும் போக்கு-வரத்துத் தடை செய்யப்பட்டதையொட்டி, இன்று அதிகாலை, மாவட்ட மாஜிஸ்திரேட் 144 ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருக்கிறார். தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் அவர்களைக் கலைந்து செல்லுமாறு போலீசார் கேட்டுக்கொண்டும் அவர்கள் மறுத்ததையொட்டி, போலீசார் சுமார் 600-க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது.

இதனையொட்டி 'எம்பரஸ்' ஆலை வாயிலில் பல தொழிலாளர்கள் உட்கார்ந்துகொண்டு மறியல் செய்திருக்கின்றனர். பின்னர் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு ஊர்வலம் நடத்தினர் என்றும், அதுபோதும் பலரைப் போலீசார் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கோப்பம்பட்டி இரா. நெடுஞ்செழியனார் படிப்பக முதலாண்டு விழா

5—2—56 மாலை 6 மணிக்கு, கோப்பம்பட்டி தேர் நிறுத்தத் திடலில், மேற்படி படிப்பக முதலாவது ஆண்டு விழா தோழர் என். அரங்கசாமி தலைமையில் நடைபெறும் தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார். அன்று இரவு 9½ மணிக்கு, பாரதிதாசன் நாடக மன்றத்தாரால், தோழர் க. அன்பழகன் தலைமையில் 'புரட்சிப் புலவன் அம்பிகாபதி' நாடகம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாடு

திருச்சியில் 1956 மே திங்கள்

17, 18, 19, 20

வியாழன் வெள்ளி சனி ஞாயிறு

நாட்களில் நடைபெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

இலட்சம் மக்கள் திரண்டனர்

பொதுக் குழு முடிவுகளை விளக்கி தோழர்கள் சங்கநாதம்

சென்னை, ஜன. 31—

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுவின் முடிவுகளை விளக்குவதற்காக, நேற்று **30—1—56** அன்று மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் சென்னை மாவட்டத் தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏறத்தாழ இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்—ஏராளமான தாய்மார்கள் உட்பட!

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ., அவர்கள் தலைமை ஏற்று, கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்ததுடன், பொதுக் குழு முடிவுகளை விளக்கியும் பேசினார்.

அடுத்து, தோழர் மதுரை எஸ். முத்து அவர்கள், தமிழர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடரும் தொல்லைகளைக் குறிப்பிட்டு, இந்தத் தொல்லைகளைத் தொலைக்க—மக்கள் வாழ்வு பெற மக்கள் என்ன செய்யவேண்டும் என்பதை விளக்கி உணர்ச்சிமிக்க தோர் உரையாற்றினார்.

அடுத்து தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், 'தேவிகுளம்—பீர்மேடு தமிழருக்குத்தான் என்று வாதாடிக் கொண்டிருப்பதற்குக் காலம் கடந்துவிட்டது; இனி போராடுவதுதான் வழி' என்று, போராடும் வழி பற்றிய தி. மு. கழக முடிவை விளக்கினார்.

பின்னர் தோழர் மு. கருணாநிதி அவர்கள், 'ஒரு தலைவரும், ஐந்து செயலாளர்களும் ஆக ஆறு பேர்கள் ஆறு வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் — ஆறுமுகங்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றன—தமிழர்தம் உரிமையைக் காக்க; அந்த ஆறுமுகங்களும், தமிழர் தம் எழுச்சிமிக்க விடுதலைப் படை', என்று குறிப்பிட்டார்.

பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்த முடிவை விளக்கிவிட்டு, 'அன்று வேலை நிறுத்தத்தில் அமைதியாக, பலாத்காரம் துளியுமின்றி ஈடுபட்டு வெற்றி தேடித் தர தயார்தானா?' என்று கேட்டபோது, கூடியிருந்த பதினாயிரக்கணக்கான மக்கள் 'தயார் தயார்' என்று கூறி, தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தார்கள், குதூகலத்தோடு—ஆர்வத்தோடு—உணர்ச்சி பொங்க!

இறுதியாகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. கழகப் பொதுக் குழு முடிவுகளை விளக்கி நீண்ட நேரம் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் புயல் நிவாரண நிதிக்கென கோமளீசுவரன் பேட்டை இளைஞர் முற்போக்கு மன்றத்தார் பொதுச் செயலாளரிடம் ரூ. 20 தந்தனர்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சிறந்த முறையில் செய்திருந்தனர், மாவட்டக் கழகத்தவர்.

சர்க்கார் உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம்

அடுத்த மாதம் விதிகள் தயாரிக்கப்பட்டுவிடுமாம்

சென்னை, ஜன. 30—

சர்க்காருடைய உதவித் தொகை பெற்று வருகின்ற பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு உபகாரச் சம்பளம் (பென்ஷன்) தருவதற்கான விதிகள், வருகிற பிப்ரவரித் திங்கள் 15-ந் தேதி வாக்கில் தயாரிக்கப்பட்டுவிடலாம் என்று, சென்னை சட்டசபைக் கூட்டத்தில், அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

உபகாரச் சம்பளம் தருவது 'அக்கவுண்ட்ண்ட் ஜெனரலி'டம் விடப்படுமென்றும் விதிகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டுப் பின்னர் அது சபையில் வைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்..

'செகண்டரி கிரேடு' பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குப் 'பென்ஷன்' தருவது பரிசீலனையிலிருந்து வருவதாகவும், விதிகள் இயற்றப்படும்போது இதுவும் கவனிக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சட்டசபை உறுப்பினருக்கு உபகாரச் சம்பளம்?

சென்னை, ஜன. 28—

'பதவிக் காலம் முடிந்து 'ரிடையர்' ஆகின்ற சட்டசபை உறுப்பினர்களுக்கு உபகாரச் சம்பளம் (பென்ஷன்) உண்டா?' என்று சட்டசபையில் கேட்கப்பட்டபோது, அமைச்சர் சுப்பிரமணியம், 'அப்படிப்பட்ட யோசனை எதுவுமே கிடையாது' என்று கூறிவிட்டிருக்கிறார்.

மேலும், 'சட்டசபை உறுப்பினர்களுக்குத் தரப்படும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டபோது, அமைச்சர், 'அந்த யோசனை பெரும்பாலும் வரவேற்கத் தகுந்ததல்ல' என்றும், எனினும் உறுப்பினர்களுக்கு அதில் அதிக ஆர்வம் இருந்தால் தனிப்பட்ட முறையில் பிரரேபணைகள் கொண்டுவரலாம் என்றும், அவ்வாறு செய்தால் சர்க்காரும் தகுந்த கவனம் செலுத்தும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

யுத்த அபாயம் நீங்கிவிடவில்லையாம்!

மாலடோவ் கூறுகிறார்

பிரேக், ஜன. 28—

"உலகில் புதிய யுத்த அபாயம் நீங்கிவிட்டதென்று கூறிவிடுவதற்கில்லை; ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த இராணுவக் கூட்டுக்களின் காரணத்தாலும், ஜெர்மன் இராணுவ ஆதிக்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு வருகின்ற காரணத்தாலும் எழுகின்ற அபாயம் இன்னும் இருந்துகொண்டே வருவதால், உலக சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றைக் கருதி வார்சா ஒப்பந்த நாடுகளின் தற்காப்புப் பலத்தை அதிகரிக்கச் செய்வதில் முயற்சி எடுத்துக்கொள்ளத் தூண்டுகிறது"

என்று, சோவியத் ரஷ்ய அயல் நாட்டமைச்சர் மாலடோவ் எச்சரிக்கைக் குறிப்பொன்று விடுத்திருக்கிறார்.

திராவிடர் திருநாள்

திருவத்திபுரம்
பெரியார் திடலில்
1—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
பு. து. ஜனார்த்தனன்

பேசுவோர்
ப. உ. சண்முகம்
முல்லை-சத்தி
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
க. அறிவழகன்

* * *

2—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
வி. குட்டியப்பன்

பேசுவோர்
வி. எஸ். கோவிந்தராசன்
என். வி. நடராசன்

★

1—2—56 மாலை 5½ மணிக்கு சென்னை புரசை தொண்டை மண்டல வேளாளர் பொழுது போக்கும் சங்கத்தில் (எண் 100 வெள்ளாழத் தெரு, புரசை) நடைபெறும். தோழர்கள் கா. அப்பாதுரை, க. அன்பழகன் ஆகியோர் பேசுவர்.

பொன்மலைமேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழக உறுப்பினர்கட்கு

1—2—56 மாலை 7 மணிக்கு கழக இல்லத்தில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கழக 6-வது ஆண்டு விழா நடத்துவது பற்றியும், கழக சம்பந்தமான இதர விஷயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

பல மொழி மாநில இணைப்புக்குக் கண்டனம்

பாட்னா நகர்மன்றத் தீர்மானம்

பாட்னா, ஜன. 28—

பீகார்—மேற்கு வங்கம் ஆகிய இரு மொழி மாநிலங்களையும் ஒன்றாக இணைப்பதென்ற நேரு சர்க்காரின் யோசனைக்குக் கண்டனம் தெரிவித்து, பாட்னா நகராண்மைக் கழகம் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

நகராண்மைக் கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அத்தீர்மானத்தில், பீகார் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமென்றும், இந்தப் பிரச்சினையின்மீது புதுத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறதாம்.

நாள் ஒன்றுக்கு 50 லட்சம் டாலர் உதவித் திட்டம்

பெங்களூர், ஜன. 28—

அடுத்த ஆண்டின் அமெரிக்கப் பொருளாதார உதவித் திட்டம், ஒவ்வொரு நாளும் 50 இலட்சம் டாலர் வீதம் பிற நாடுகளுக்கு உதவும் வகையில் அமைந்திருக்கும் என்று அமெரிக்கத் தூதுக் குழு ஒன்று கூறியிருக்கிறது.

இம்மாதிரியான உதவி, இதுவரையும் உலக நாடுகள் கண்டும் கேட்டும் அறியாதவை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வடக்குக்குத் தெற்கு தாக்கீது....

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

சுந்தரம், தொழிலதிபர் வி. எஸ். தியாகராசன், செஞ்சிலுவைச் சங்கச் கௌரவச் செயலாளர் அமிர்தகணேசனார், டாக்டர் ஏ. சீனுவாசன் எம் எல் சி, முன்னாள் இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் ஜெனரல் மானேஜர் ஏ. சுப்பையா ஆகியோர்.

எனவே, தென்னகத்துப் பொது வாழ்வில் பல்வேறு கோணங்களில் நின்று பணிபுரிவோரின் கூட்டணியின் ஒருமித்தக் கருத்து, வடக்குக்கு அறிவித்தாகிவிட்டது.

இனி, வடக்கு என்ன செய்யப் போகிறது? தென்னகத்துத் தாக்கீதுக்கு மதிப்பளித்து, 'ஆங்கிலம் பொது மொழி' என்று தீர்ப்பு அளிக்கப் போகிறதா, அல்லது 'ஆச்சாரியார்—பெரியார் கூட்டணி அமைத்து அதிலே அண்ணாதுரையும், நெடுஞ்செழியனும், ம. பொ. சி.,-யும் சேர்ந்துகொண்டு மற்றும் பலர் கூடி நின்றால் என்ன—இதற்கா மிரண்டுவிடுவோம்—எமக்குக் கக்கன்ஜீயும், காமராஜ்ஜீயும் இருக்கிறார்கள்; போதும்,' என்று இறுமாந்து கிடக்கப் போகிறதா என்று தெரியவேண்டும்.

சிதம்பரம் காணாத மக்கள் கூட்டம்

போராட்டத்தைவிளக்கிமுன்னணி வீரர்கள் முழக்கம்

சிதம்பரம் டவுன் ஆல் மைதானத்தில் 29—1—56 அன்று மாலை, பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக் குழுவின் முடிவுகளைத் தெரிந்துகொள்ளுவதற்காக ஆண்களும் பெண்களுமாக சிதம்பரம் நகரத்திலிருந்து மட்டுமின்றி, அடுத்துள்ள சிறிய பெரிய ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத்திற்கு தோழர் தில்லை-வில்லாளன் தலைமைவகித்து, கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறினார்.

அடுத்து தோழர்கள் இளம்பரிதி, முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சிறிது நேரம்பேசியதும், தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள், தேவிகுளம்-பீர்மேடு விவகாரங்கள் பற்றிய தி. மு. கழகப் பொதுக் குழு முடிவினை விளக்கி அரியதோர் சொற்பெருக்காற்றினார்.

இந்தச் சிக்கல் குறித்து கழக முடிவை அறியவேண்டும் என்று சில நாட்களாகவே காத்துக் கிடந்த மக்கள், தங்கள் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த ஆவலை தேக்கிவைத்திருந்த கண்களை அகலத் திறந்து இமை கொட்டாது அமைதியாக சம்பத் தந்த விளக்கத்தைக் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

இடை இடையே மக்கள் எழுப்பிய ஆரவாரப் பேரொலி தி. மு கழக முடிவைப் புரிந்துகொண்டதால் அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைத் தெளிவாக்கிற்று.

அடுத்து தோழர்கள் கே. டி. எஸ். மணி, மனோகரன், கண்ணதாசன், கே. ஏ. மதியழகன், டி. வி. நாராயணசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கருணாநிதி அன்பில் - தர்மலிங்கம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அ. பொன்னம்பலனார் ஆகியோர் முடிவுகளை விளக்கியும், பிப்ரவரி 20-ந் தேதியன்று சர்வகட்சியினரும் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு இணங்கி நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தம் பற்றியும் எடுத்துரைத்தனர்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் முடிவுகளை விளக்கிப் பேசினார்கள்

பின்னர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழக முடிவுகளைக் குறித்தும், சர்வகட்சி மாநாடுகளில் கலந்துகொண்டது குறித்தும் விளக்கம் தந்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக, அண்ணா அவர்கள் பிப்ரவரி 20-ந் தேதியன்று நடைபெறும்போது வேலை நிறுத்தத்தில் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு வெற்றி தேடித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

இதற்கு முன்பாக, தோழர் பொன்-சொக்கலிங்கம் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

சிறப்புமிக்க பொதுக்கூட்டத்தின் வெற்றிக்கும், பொதுக் குழுக் கூட்டம் சீருடனும், சிறப்புடனும் நடைபெறுவதற்கும் தில்லை கழகத் தோழர்கள் மெத்த சிரமப்பட்டு உழைத்திருக்கிறார்கள். பொதுக் குழு உறுப்பினர்கள் பலரையும் உபசரிக்கவும் இதர நடவடிக்கைகள் செம்மையாக நடைபெறவும் அவர்கள் செலவிட்ட உழைப்பு பலரின் பாராட்டுதலையும் பெற்றது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பொதுக் குழுக் கூட்டத்தையும், பொதுக் கூட்டத்தையும் வெற்றிகரமாக நடத்துவதற்குத் தோழர்கள் தில்லை-வில்லாளன், சக்கரவர்த்தி, பொன் - சொக்கலிங்கம், பாலகுருசாமி, திருவேங்கடம், கோபால், இராமகிருட்டினன், இராசேந்திரன் முதலியோர் முன்னின்று அரும்பாடுபட்டனர் அவர்கள், தங்கள் உழைப்பு பெற்ற வெற்றி கண்டு மகிழ்வதில் தவறில்லையல்லவா? (ந.-கி.)

சமூக நலத் திட்டத்திற்கு ரூ. 200 கோடி

தேசீய அபிவிருத்தித் திட்டத்தின் ஆமை வேகம்

புதுடில்லி—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமூக நலத் திட்டங்கள், தேசீய விரிவுபடுத்தும் திட்டங்கள் ஆகியவற்றிற்காக ரூ 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

அங்கீகரிக்கப்பட்ட திட்டச் செலவுக்கான தொகைகள், திட்டத்தை மேற்கொள்ளும் வழிவகைகள் ஆகிய குறித்து, மாநில சர்க்கார் சமூக நலத் திட்டங்களுடன் நிர்வாகிகள் கலந்தாலோசித்து வருகின்றனராம்.

இந்தியா முழுமையிலுமுள்ள கிராமாந்திரங்கள் அனைத்தும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாகத் தேசீய விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுவிடும் என்று தேசீய அபிவிருத்திக் குழு எண்ணிக்கொண்டதாகவும், அதிலும் 40 சதவிகித வேலைகள் தீவிர சமூக அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும் என்று நம்பினதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், சென்ற 1952 அக்டோபர் திங்கள் முதலே துவக்கப்பட்ட சமூக நல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், இதுவரையிலும் நாட்டிலுள்ள 5-ல் 1-பகுதி கிராமாந்திரப் பகுதிகள்தான் கொண்டுவரப்பட்டிருக்கின்றன!

பக்ராவுக்கு பிரிட்டிஷ் மின்சார சாதனங்கள்

பக்ரா அணைக்கட்டிலுள்ள நீர்—மின் நிலையத்திற்குத் தேவையான மின்சார உற்பத்தி இயந்திரங்களை பிரிட்டனிடமிருந்து வாங்க பஞ்சாப் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்.

இயந்திர விற்பனையில் பல நாடுகள் போட்டியிட்டன. சுமார் 10,00,000 பவுன்கள் பெறுமானமுள்ள இயந்திர சாதனங்களை பிரிட்டிஷ் நிறுவனமொன்று அனுப்பும்.

சர்வகட்சித் தலைவர்கள் மாநாடு கூட்ட முயற்சி?

பூனா, ஜன. 29—

சர்வகட்சித் தலைவர்கள் அடங்கிய மாநாடொன்று நடத்துவதற்கு பி. சோ. கட்சித் தலைவர் எஸ். எம். ஜோஷிக்கு அதிகாரம் அளித்து, இங்கு நடைபெற்ற பூனா நகர சம்யுக்த மாராட்டிய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உடனடியாகத் தேவை

திருச்சி நகரில் 'நம் நாடு' விற்பனை செய்ய முன் பணம் கட்டக் கூடிய பொறுப்பு வாய்ந்த ஏசண்டு உடனே தேவை.

—பொறுப்பாளர்,
'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ